# அலகு – 1

## TT0101 தமிழ் கற்றல் – கற்பித்தல் ஓர் பார்வை

### இந்த அலகு என்ன சொல்கிறது?

தம் கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தும் கருவியான ஒலித்தொகுதியே 'மொழி' ஆகும். இந்த மொழியைக் கற்பிப்பதற்கு அதன் தோற்றம், வளர்ச்சி குறித்து அறிந்திருப்பது முதன்மையானதாகும். மொழிகளில் தொன்மையான தமிழ்மொழியைக் கற்பிப்பதற்குரிய மொழியின் பன்முக வளர்ச்சி, தமிழ்மொழியை வகுப்பறைச் சூழலில் கையாளும் திறன் மற்றும் மொழிக்குரிய பண்புநலன் குறித்து விளக்குவதே இந்த அலகின் நோக்கமாகும்.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- கலைத்திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.
- தமிழ்மொழி கலைத்திட்டத்தில் பெறுமிடம் குறித்து அறியலாம்.
- மொழியின் பன்முக வளர்ச்சியைத் தெரிந்து கொள்ளலாம்.
- இரண்டாம் மொழியாக தமிழ்க் கற்றலை ஊக்குவிக்கலாம்.
- தமிழ் மொழியை வகுப்பறைச் சூழலில் கையாளுதலைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.
- மொழி ஆசிரியருக்குரிய பண்புகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**பாட அமைப்பு**


| | |
|---|---|
| 1.0 | **பாட முன்னுரை** |
| 1.1 | **கலைத்திட்டத்தில் தமிழ்மொழி பெறுமிடம்** |
| 1.1.1 | கலைத்திட்டம் |
| 1.1.2 | கலைத்திட்டத்தில் தமிழ்மொழி |
| 1.2 | **மொழியின் பன்முக வளர்ச்சி** |
| 1.2.1 | மொழியின் வளர்ச்சி |
| 1.2.2 | பண்பாடு |
| 1.2.3 | இலக்கணங்கள் |
| 1.2.4 | இலக்கியங்கள் |
| 1.2.5 | இலக்கிய வரலாறு : தோற்றம் வளர்ச்சி |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| 1.3 | **இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பித்தல்** |
| 1.3.1 | இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்றலும் அடிப்படைத் திறன்களும் |
| 1.3.2 | இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்றலில் ஏற்படும் இடர்ப்பாடுகள் |
| 1.3.3 | இரண்டாம் மொழி கற்றலை மேம்படுத்துதல் |
| 1.4 | **வகுப்பறைச் சூழலும் மொழியைக் கையாளுதலும்** |
| 1.4.1 | மொழியை வகுப்பறையில் கற்பித்தலின் அவசியம் |
| 1.4.2 | மொழியை வகுப்பறையில் கற்பித்தலின் நோக்கங்கள் |
| 1.4.3 | வகுப்பறையில் மொழியைக் கையாளும்போது கவனிக்க வேண்டிய கூறுகள் |
| 1.4.4 | வகுப்பறைச் சூழலும் மொழியைக் கையாளுதலும் |
| 1.5 | **மொழியாசிரியருக்குரிய பண்பு நலன்கள்** |
| 1.5.1 | மொழியாசிரியரின் பண்பு நலன்கள் |
| 1.6 | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 1.0 பாட முன்னுரை

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில்தான் தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவர் இந்த உலகில் பெறுகிற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி ஆகும். கல்வி ஒரு சமூகத்தின் ஒருங்கிணைந்த அறிவு, திறன் மற்றும் மதிப்பீடுகளை ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கொண்டு செல்ல உதவும் ஒரு காரணியாகத் திகழ்கிறது. இக்கல்வி தரமாகவும், மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அமைய கலைத்திட்டம் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. கலைத்திட்டம் கல்வியின் செயல் வடிவமாக விளங்குகிறது. ஆளுமை, படைப்பாற்றல், அறிவு, கற்றல் அனுபவங்கள், மனவெழுச்சி, உடற் செயற்பாடுகள் என மானுடப் பண்புகளை உயர்த்தும் நோக்கில் கலைத்திட்டச் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மொழியை அறிதல், உணர்தல், பயன்படுத்துதல் என்ற நோக்கில் மொழித்திறனை வளப்படுத்த கலைத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பாடப்பகுதி மொழியின் பன்முக வளர்ச்சி, தமிழ்மொழியை வகுப்பறைச் சூழலில் கையாளும் திறன் மற்றும் மொழிக்குரிய பண்புநலன் குறித்து விளக்குதல் என்ற நோக்கில் அமைந்துள்ளது.

## 1.1. கலைத்திட்டத்தில் தமிழ்மொழி பெறுமிடம்

கலைத்திட்டம் பற்றிய விளக்கத்தையும், அதில் தமிழ்மொழி பெறுகின்ற இடத்தையும் இந்த அலகு வழி அறிய முடிகிறது.

### 1.1.1 கலைத்திட்டம்

ஆங்கிலத்தில் 'Curriculum' என்று அழைக்கப்படும் சொல்லானது 'Carrere' எனும் இலத்தீன் மொழிச் சொல்லிருந்து பெறப்பட்டதாகும். இது "ஓட்டம்" என்று பொருள்படும் அதாவது கலைத்திட்டம் என்பது 'இலக்கை அடைவதற்கான ஓட்டப்பாதை' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. எலிசபெத் (1965) என்பவர் "கலைத்திட்டம் என்பது கற்பிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பாடப்பொருள்களின் அளவு" எனவும் குரோ & குரோ என்பார், "கலைத்திட்டம் என்பது கற்பவர்களின் அனைத்து அனுபவங்களையும் உள்ளடக்கியதாகும். பாடசாலையின் உள்ளே அல்லது வெளியே பெற்றுக்கொள்ளப்படும் அனைத்து அனுபவங்களும் அதனுள் அடங்கும். மாணவர்களை உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் மனவெழுச்சிரீதியாகவும் சமூகரீதியாகவும் ஒழுக்கரீதியாகவும் அறிவுரீதியாகவும் கற்றலை விரும்பிச்செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றது."

எனவும் தத்தம் கருத்துகளை முன்மொழிந்தனர். இவ்வாறு பல ஆராய்ச்சியாளர்களால் ஆராய்ந்து உணரப்பட்ட கலைத்திட்டமானது குறிப்பிட்ட சில கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என எண்ணப்படுகிறது.

- கல்வியின் அடிப்படைக் குறிக்கோள்களை அடையக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- மாணவர்களின் அனைத்துச் செயற்பாடுகளை உள்ளடக்கி முழுமையாகச் செயற்படகூடியதாக இருத்தல் வேண்டும்.
- இளம்தலைமுறையினருக்கும் தேவையான அனுபவங்களை வழங்குவதாக அமைதல் வேண்டும்.
- சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும்.
- கல்வியில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தொடர்ந்து மாறும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.
- வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெறும் கற்றலுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.
- மாணவர்களது ஆளுமை வளர்ச்சிக்கு உதவக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- மாணவர்கள், பரந்த நோக்கங்களை அடையக்கூடிய வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.
- நடைமுறையிலுள்ள கல்வி முறையை முழுமையாகக் கொண்டு பாடமாகக் கலைத்திட்டம் இருத்தல் வேண்டும்.
- சமுதாய முன்னேற்ற அடிப்படையில் கலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

மேற்கூறிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கலைத்திட்டம் உருவாக்கப்படும்போது அவை சிறப்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

### 1.1.2 கலைத்திட்டத்தில் தமிழ்மொழி

குழந்தைகள், பள்ளிக்கு வரும் முன்னரே அவரவர் வாழ்க்கைச் சூழலுக்குட்பட்டு ஏராளமான சொற்களை அறிந்து வைத்திருப்பர். மொழியைப் பற்றிய அடிப்படைப் புரிதலும், உரிய இடங்களில் அதைச் சரியாகப் பயன்படுத்தும் திறமையும் அவர்களுக்கு இருக்கும். இத்தகைய தொடக்கநிலைத் திறன்களைப் படிப்படியாக ஒருங்கிணைத்து வளர்ப்பதே தமிழ்மொழிக் கல்வி கற்பித்தலின் நோக்கமாகும்.

தமிழ்மொழிப் பாடத்திட்டம் செம்மையாக அமையவேண்டுமெனில் குழந்தைகளிடம் மொழி அறிவோடு அன்றாட வாழ்க்கை உரையாடல்களும் இடம்பெறுதல் வேண்டும். பள்ளிப்பருவத்திலேயே தமிழ்மொழிப் பாடத்தைப் பற்றி முழுமையாக அறிய வேண்டும். அப்போதுதான் பன்மொழிப்புலமையை எளிதில் பெறமுடியும்.

அடிப்படை மொழியறிவுடன் குழந்தைகள் பள்ளிக்கு வந்தாலும், முறையான மொழி அறிவைப் பள்ளிகளில் மட்டுமே போதிக்க முடியும். மொழிகற்பித்தல் என்பது வகுப்பறைக்குள் நின்று விடுவதில்லை. கதை, செய்யுள், நாடகம் போன்ற கலை வடிவங்களின் மூலம் பெறும் மொழி அறிவால், இலக்கண அறிவும் பெறமுடியும்.

இக்கலைத்திட்டம் பற்றிய கருத்துகளை ஆசிரியர்கள் முழுமையாக அறிந்திருந்தால் மட்டுமே மாணவர்களின் கற்றல், கற்பித்தல் திறன்களை மேம்படுத்திக் கொள்ளமுடியும்.

## 1.2 மொழியின் பன்முக வளர்ச்சி

தமிழ்மொழி தொன்மை வாய்ந்த மொழியாகும். தமிழ்மொழிக்கு வரிவடிவம் எந்த காலத்தில் உருவானது என்று தெரியவில்லை. ஒலியாகப் பிறந்து, சித்திரமாய் மாறி, உருக்கள் பல எடுத்து, காலங்கள் கடந்து கல்வெட்டுகளில் உராய்ந்து, செப்பேடுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் தோய்ந்து, வெள்ளைக்காகிதத்தில் தவழ்ந்து, கணினியில் வீரநடைபோடும் தேன்தமிழ் மொழியே நம் தாய்த்தமிழ் மொழி ஆகும்.

### 1.2.1 மொழியின் வளர்ச்சி

மொழி என்பது எண்ணத்தையும் கருத்தையும் வெளிப்படுத்தக் கூடிய கருவி ஆகும். இஃது ஒலிக்குறிப்பில் தோன்றி, சைகைமொழியாக மாறி பேச்சுமொழி, எழுத்துமொழி என வளர்ந்து வந்துள்ளது. இத்தமிழ்மொழியின் வளர்ச்சியைப் பல படிநிலைகளாகச் சுட்டுகின்றனர் அறிஞர்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. இவர் தமிழின் வளர்நிலைகளை,

1. பண்டைத் தமிழ் நிலை – தொல்காப்பியம், சங்க இலக்கியம்.
2. காப்பியக்காலத் தமிழ் நிலை – சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம்.

3. இடைக்காலத் தமிழ் நிலை – தேவாரம், திவ்யப்பிரபந்தம், சிந்தாமணி.
4. தற்காலத் தமிழ் நிலை – நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்கள்.

என நான்கு வகையாகப் பிரித்துள்ளார். இந்த ஒவ்வொரு நிலையிலும் தமிழ்மொழியானது காலத்திற்கேற்பச் சமூகம், பண்பாடு, அரசியல், பொருளாதாரக் காரணிகளால் பல வகைகளில் பரிணமித்து வந்துள்ளது.

### 1.2.2 பண்பாடு

மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும். மனிதனின் பண்பைப் பக்குவப்படுத்துவது பண்பாடாகும்.

"தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கே திருந்திய மனப்பான்மை என்று பொருள்பட வேண்டும்" என்று எஸ். வையாபுரிப்பிள்ளை பண்பாட்டிற்கு விளக்கம் கொடுத்துள்ளார். மேலும், "பண்படுவது பண்பாடு, பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தை பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்" என மொழி ஞாயிறு தேவநய பாவணர் பண்பாடு குறித்துக் கூறுகிறார். பொதுவாகப் பண்பாடு என்பது பண்பட்ட, பக்குவப்பட்ட, சீரான, நேரிய வழியில் செல்லும் ஒழுக்கமாகும்.

- **தமிழர் பண்பாடு**

தொல்காப்பியர் காலத்திலேயே பண்பாடு குறித்த சிந்தனை தமிழகத்தில் இருந்துள்ளது என்பதற்குச் சான்றாக "இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி" (தொல்காப்பியம், சொல், நூ.782) என்ற நூற்பா புலப்படுத்துகிறது. "பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்" (கலித், பா.133) என்ற கலித்தொகைப் பாடல் சங்க காலத்திலேயே பண்பினைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டைப் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளன. இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் பண்பாட்டுடன் தொடர்புள்ள வெவ்வேறு பொருள்களைக் குறித்தாலும், பல இடங்களில் பண்பாட்டையே குறிப்பிடுகின்றன. பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும், ஒழுக்கம் உடையோர் என்றும், மாசற்ற காட்சி உடையோர் என்றும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### 1.2.3 இலக்கணங்கள்

ஒரு மொழியில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாறுதல்களைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது மொழிவளர்ச்சிக்கு அரணாக விளங்குவன இலக்கண நூல்கள் ஆகும். தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவை **ஐந்திலக்கணம்** என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் **எழுத்து, சொல்** இலக்கணங்கள் மொழிக்கு இலக்கணம் கூறுபவை ஆகும். **பொருள்** இலக்கணம் மொழியில் எழுதப்படும் இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு இலக்கணம் கூறுவது ஆகும். **யாப்பிலக்கணம்** என்பது இலக்கியம் எழுதப்படும் செய்யுளின் இலக்கணம் கூறுவதாகும். யாப்பிலக்கணத்தின் ஒரு வளர்ச்சியாகப் **பாட்டியல் இலக்கணம்** தோன்றியது. பிள்ளைத்தமிழ், உலா, தூது போன்ற இலக்கியங்களின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் இடம்பெற்றுள்ளது. **அணி** இலக்கணம் செய்யுளில் அமையும் உவமை, உருவகம் முதலிய அணிகளின் இலக்கணத்தைக் கூறுகிறது. தமிழில் தோன்றியுள்ள இலக்கண நூல்களின் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **அகத்தியம்**

முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் நற்றமிழ் நூல். தொல்காப்பியத்திற்கு மூலநூல். இது அகத்தியரால் எழுதப்பட்டது. அகத்தியர் தலைச்சங்கத்திலும், இடைச்சங்கத்திலும் இருந்து தமிழ் ஆராய்ந்தார் என்று கூறப்படுகிறது. இவரது சீடர்கள், அதங்கோட்டாசான், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயர், காக்கைப்பாடினியார், நத்தத்தனார், வாமனார், தொல்காப்பியர் முதலான பன்னிருவர் ஆவார்கள். இவர்கள் இயற்றிய நூல்களே **பன்னிரு படலம். அகத்தியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், காந்தருவம்** முதலிய பல பகுதிகளை உடையது. இந்நூல் மொத்தம் 12000 நூற்பாக்களைக் கொண்டதாகும்.

- **ஐந்திலக்கண நூல்கள்**

ஐந்து இலக்கணத்தையும் கூறும் நூல்கள் பின்வருமாறு :

#### தொல்காப்பியம்

கி.மு.4 ஆம் நூற்றாண்டில் தொல்காப்பியரால் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள் ஆகிய 3 அதிகாரங்கள் கொண்டு பொருளிலக்கணத்தில் யாப்பும்,

அணியும் கூறப்பட்டுள்ளது. அதிகாரத்திற்கு 9 வீதம் 27 இயல்கள் கொண்டுள்ளது. மொத்தம் 1,610 நூற்பாக்கள் காணப்படுகின்றன. மூன்று அதிகாரங்களுக்கு இளம்பூரணரும் சொல்லிலக்கணத்திற்கு சேனாவரையரும் பொருளிலக்கணத்திற்கு பேராசிரியர் மற்றும் நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும் தனித்தனியாகத் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளனர்.

### இலக்கண விளக்கம்

கி.பி.11 ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரரால் எழுதப்பெற்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்று ஐந்திலக்கணங்களையும் வடமொழி மரபில் எழுதியுள்ளார். மொத்தம் 183 நூற்பாக்கள் உள்ளன. பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

### வீரசோழியம்

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஐந்திலக்கணங்களையும் தமிழ்மொழி மரபில் எழுதியுள்ளார். 941 நூற்பாக்களுக்கும் இவரே உரை எழுதி விளக்கியுள்ளார்.

### தொன்னூல் விளக்கம்

வீரமாமுனிவரால் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஐந்திலக்கணங்களையும் தமிழ்மொழி மரபில் எழுதியுள்ளார். 370 நூற்பாக்களுக்கும் இவரே உரை எழுதி தந்துள்ளார்.

### முத்துவீரியம்

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் முத்துவீர உபாத்தியாயரால் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஐந்திலக்கணங்களையும் தமிழ்மொழி மரபில் எழுதியுள்ளார். 1,288 நூற்பாக்களுக்கும் திருப்பாற்கடல்நாதன் கவிராயர் உரை எழுதி தந்துள்ளார்.

### சுவாமிநாதம்

சுவாமி கவிராயரால் கி.பி.19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஐந்திலக்கணங்களையும் தமிழ்மொழி மரபில் எழுதியுள்ளார். 201 வெண்சீர் விருத்தங்களாக எழுதி தந்துள்ளார்.

- ## பிற இலக்கண நூல்கள்

பிற இலக்கண நூல்களின் தகவல்கள் கீழ்வருமாறு:

### நேமிநாதம் (சின்னூல்)

குணவீர பண்டிதரால் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எழுத்து, சொல் இரண்டுக்கும் இலக்கணம் தருவது. 99 வெண்பாக்களைக் கொண்டது.

### நன்னூல்

பவணந்தி முனிவரால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எழுத்து, சொல் இரண்டுக்கும் இலக்கணம் தருவது. 462 நூற்பாக்கள் உடையது.

### நம்பியகப்பொருள்

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என 5 இயல்களையும் 252 நூற்பாக்களையும் கொண்டது. இவரே உரை தந்துள்ளார்.

### புறப்பொருள் வெண்பா மாலை

கி.பி.9 ஆம் நூற்றாண்டில் ஐயனாரிதனாரால் இயற்றப்பட்டுள்ளது. புறப்பொருள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என 9 திணைகளையும், 361 பாக்களையும் கொண்டுள்ளது.

### யாப்பருங்கலம்

அமிர்தசாகரனாரால் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்கள் உள்ளன. 96 நூற்பாக்களைக் கொண்டது.

### யாப்பருங்கலக் காரிகை

அமிர்தசாகரனாரால் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்கள் உள்ளன. 44 காரிகைகள் கட்டளைக் கலித்துறைப் பாக்களைக் கொண்டது.

### தண்டியலங்காரம்

தண்டியாசிரியரால் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பொது அணியியல், பொருள் அணியியல், சொல் அணியியல் என மூன்று இயல்களைக் கொண்டது. 125 நூற்பாக்களைக் கொண்டது.

## 1.2.4 இலக்கியங்கள்

காலந்தோறும் படைக்கப்படும் இலக்கியங்கள், மனிதன் வாழ்வாங்கு வாழ உயரிய கருத்துகளைச் சமூகத்திற்குத் தரவேண்டும். "இலக்கியம் என்பது தமிழ்ச்சொல். இதனை 'இலக்கு + இயம்' எனப் பிரிக்கலாம். 'இலக்கு' என்பது குறிக்கோளையும் 'இயம்' என்பது சொல்லுதலையும் குறிக்கும். இது 'குறிக்கோளை இயம்புவது' என்னும் பொருளைத் தருகிறது. வாழ்வின் குறிக்கோளை வகையுற எடுத்து இயம்புவதே இலக்கியமாகும். தமிழிலக்கியத்தின் துணைக்கொண்டு தமிழ்மக்களின் வாழ்வியலை அறியலாம்" என முனைவர் சி. இலக்குவனார் கூறுகிறார்.

- **முச்சங்கத் தகவல்கள்**

| சங்கம் | இடம் | சங்கம் வளர்த்த அரசர்கள் | நூல்கள் |
|---|---|---|---|
| முதற்சங்கம் | தென்மதுரை (பஃறுளி ஆற்றங்கரை) | காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை (89 பேர்) | பெருகு, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம் |
| இடைச்சங்கம் | கபாடபுரம் (குமரி ஆற்றங்கரை) | வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை (59 பேர்) | பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம் |
| கடைச்சங்கம் | மதுரை (வைகை ஆற்றங்கரை) | முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை (49 பேர்) | நெடுந்தொகை (அகநானூறு), குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, |

| சங்கம் | இடம் | சங்கம் வளர்த்த அரசர்கள் | நூல்கள் |
|---|---|---|---|
| | | | பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிப்பாடல்,கூத்து, வரி, குற்றிசை, பேரிசை |

முச்சங்கங்கள் பற்றிய தகவல்களை இறையனார் களவியல் உரைவழி அமைந்த தகவல்கள் அட்டவணைவழி விளக்கப்பட்டுள்ளது.

### 1.2.5 இலக்கிய வரலாறு : தோற்றமும் வளர்ச்சியும்

இலக்கிய வரலாறு என்பது இலக்கியங்களைக் கால வரிசைப்படித் தொகுத்துக் கூறுவது மட்டுமல்ல; அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறுவதாகும். அதனால்தான் இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்கிறார்கள் அறிஞர்கள்.

#### வகைப்பாடு

தமிழ் இலக்கிய வரலாற்றை பழங்காலம், இடைக்காலம், நவீன காலம் எனப் பிரிக்கலாம். பழங்காலத்தில், சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பழம்பெருங் காப்பியங்கள் ஆகியவை இதில் அடங்கும். இடைக்காலத்தில் பக்தி இலக்கியம், பிரதிகள், புராண இலக்கியம், உரை வகைகள் போன்றவை அடங்கும். இந்த காலக்கட்டத்தில் உரைநடை, நாவல், நாடகம், சிறுகதை மற்றும் புதிய கவிதை உள்ளிட்ட இலக்கிய வகைகளும் அடங்கும்.

சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் எனத் தமிழகத்தை ஆண்ட மன்னர்களின் ஆட்சியின் அடிப்படையில் காலம் வரையறுக்கப்பட்டுள்ளன. வீர யுக காலம், நீதி இலக்கிய காலம், பக்தி இலக்கிய காலம், காப்பிய காலம், உரை இலக்கிய காலம், மறுமலர்ச்சி இலக்கிய காலம் என இலக்கிய வகை அடிப்படையிலும் பிரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பகுக்கப்பட்ட இலக்கியங்கள் பின்வருமாறு:

- **சங்க காலம்**

கி.மு. 500 முதல் கி.பி. 200 வரையிலான காலம் சங்க காலம் எனப்படும். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனப்படும். சங்க

காலத்தில் அகத்தியம், தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்கள் தோன்றின. காதலும் வீரமும் காலத்தின் கருப்பொருள்களாக இருந்தது. இச்சங்க இலக்கியங்கள் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய மூன்று பாவகைகளைக் கொண்டவை.

## எட்டுத்தொகை நூல்கள்

| நூல் | பாடல் | அடி வரையறை | பொருள் | தொகுத்தர் | தொகுப்பித்தவர் |
|---|---|---|---|---|---|
| நற்றிணை | 400 | 9–12 | அகம் | தெரியவில்லை | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி |
| குறுந்தொகை | 400 | 4–8 | அகம் | பூரிக்கோ | தெரியவில்லை |
| ஐங்குறுநூறு | 500 | 3–6 | அகம் | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை |
| பதிற்றுப்பத்து | 100(80) | 8–57 | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை |
| பரிபாடல் | 70(22) | 25–400 | அகம் + புறம் | தெரியவில்லை | தெரியவில்லை |
| கலித்தொகை | 150 | 11–80 | அகம் | நல்லந்துவனார் | தெரியவில்லை |
| அகநானூறு | 400 | 13–31 | அகம் | உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப்பெருவழுதி |
| புறநானூறு | 400 | 4–40 | புறம் | தெரியவில்லை | தெரியவில்லை |

## பத்துப்பாட்டு

| நூல்கள் | பாடிய புலவர் | அடி அளவு |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | நக்கீரனார் | 317 |
| பொருநராற்றுப்படை | முடத்தாமக் கண்ணியார் | 248 |
| சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் | 269 |
| பெரும்பாணாற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | 500 |
| முல்லைப்பாட்டு | நப்பூதனார் | 103 |
| மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனர் | 782 |
| நெடுநல்வாடை | நக்கீரனார் | 188 |
| குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | 261 |
| பட்டினப்பாலை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | 301 |
| மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் | 583 |

- **சங்கம் மருவிய காலம்**

கி.பி.100 முதல் கி.பி.500 வரையிலான காலத்தைச் சங்க மருவிய காலம் என்பர். நீதி இலக்கியம் இக்காலத்தில் தோன்றியது. இவற்றில் பெரும்பான்மையான நீதி இலக்கியங்கள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நீதி இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று அழைப்பர். இக்காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை எனப் போற்றப்படும் இரட்டைக் காப்பியங்களும், முத்தொள்ளாயிரமும் தோன்றின.

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

| எண் | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 2. | நாலடியார் | சமண முனிவர்கள் |
| 3. | நான்மணிக்கடிகை | விளம்பி நாகனார் |
| 4. | இன்னா நாற்பது | கபிலர் |
| 5. | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் |
| 6. | திரிகடுகம் | நல்லாதனார் |
| 7. | ஆசாரக்கோவை | பெருவாயின் முள்ளியார் |
| 8. | பழமொழி | முன்றுறையரையனார் |
| 9. | சிறுபஞ்சமூலம் | காரியாசான் |
| 10. | ஏலாதி | கணிமேதாவியார் |
| 11. | முதுமொழிக்காஞ்சி | மதுரைக்கூடலூர் கிழார் |
| 12. | ஐந்திணை ஐம்பது | மாறன் பொறையனார் |
| 13. | திணைமொழி ஐம்பது | கண்ணன் சேந்தனார் |
| 14. | ஐந்திணை எழுபது | மூவாதியார் |
| 15. | திணைமாலை நூற்றைம்பது | கணிமேதாவியார் |
| 16. | கைந்நிலை | புல்லங்காடனார் |
| 17. | கார் நாற்பது | மதுரைக்கண்ணன் கூத்தனார் |
| 18. | களவழி நாற்பது | பொய்கையார் |

- **பக்தி இலக்கிய காலம்**

கி.பி. 600 முதல் 900 வரையிலான காலகட்டம் பல்லவர் காலம் அல்லது பக்தி இலக்கியத்தின் காலம் என்று குறிப்பிடப்படுகிறது. இக்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றித் தமிழை வளர்த்தனர். நாயன்மார்களின்

எழுத்துகள் பன்னிரு திருமுறைகள் எனப் பெயர் பெற்றன. இவற்றை நம்பியாண்டார் நம்பி தொகுத்துள்ளார்.

பன்னிரு ஆழ்வார்கள் எழுதிய பாசுரங்கள் அனைத்தும் நாலாயிர திவ்விய பிரபந்தம் என்ற பெயரில் தொகுக்கப்பட்டன. இவற்றைத் தொகுத்த பெருமை நாதமுனியைச் சாரும். சிவபெருமானையும் திருமாலையும் பல்வேறு நிலைகளில் பாடும் பாடல்களின் தொகுப்பைப் பக்தி இலக்கியங்கள் என்கிறோம்.

## பன்னிரு திருமுறைகள் – I

| | |
|---|---|
| 1,2,3 திருமுறைகள் | திருஞானசம்பந்தர் 'தேவாரம்' |
| 4,5,6 திருமுறைகள் | திருநாவுக்கரசர் 'தேவாரம்' |
| 7ம் திருமுறை | சுந்தரர் 'தேவாரம்' |
| 8ம் திருமுறை | மாணிக்கவாசகர் திருவாசகம் |
| 9ம் திருமுறை | பாடியோர் : ஒன்பதின்மர்<br>1. திருமாளிகைத்தேவர்<br>2. சேந்தனார்<br>3. கருவூர்த் தேவர்<br>4. பூந்துருத்தி காட நம்பி<br>5. கண்டராதித்தர்<br>6. வேணாட்டடிகள்<br>7. திருவாலியமுதனார்<br>8. புருடோத்தம நம்பி<br>9. சேதிராயர் |
| 10ம் திருமுறை | திருமூலர் திருமந்திரம் |
| 11ம் திருமுறை | பன்னிருவர்<br>1. திருவாலவாயுடையார்<br>2. காரைக்காலம்மையார்<br>3. ஐயடிகள் காடவர்கோன்<br>4. சேரமான் பெருமாள் நாயனார்<br>5. நக்கீரதேவ நாயனார்<br>6. கல்லாடதேவ நாயனார்<br>7. கபிலதேவ நாயனார்<br>8. பரணதேவ நாயனார்<br>9. இளம்பெருமான் அடிகள்<br>10. அதிராவடிகள்<br>11. பட்டினத்துப் பிள்ளையார்<br>12. நம்பியாண்டார் நம்பி |
| 12ம் திருமுறை | சேக்கிழார் அருளிய பெரியபுராணம் |

## பதினொன்றாம் திருமுறை நூல்கள் – II

| | |
|---|---|
| 11ஆம் திருமுறை பன்னிருவர் | |
| திருவாலவாயுடையார் (கி.பி.6ம் நூற்றாண்டு) | 1. பாணபத்திரர் பொருட்டு சேரமானுக்கு எழுதிய பாசுரம் |
| காரைக்கால் அம்மையார் (கி.பி.5ம் நூற்றாண்டு) | 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் (2)<br>2. திரு இரட்டை மணிமாலை<br>3. அற்புதத் திருவந்தாதி |
| கல்லாடதேவ நாயனார் | 1. திருக்கண்ணப்பர் திருமறம் |
| நக்கீரதேவ நாயனார் (கி.பி.6ம் நூற்றாண்டு) | 1. திருமுருகாற்றுப்படை<br>2. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி<br>3. திரு ஈங்கோய்மலை எழுபது<br>4. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை<br>5. திருவெழுகூற்றிருக்கை<br>6. கோபப் பிரசாதம்<br>7. காரெட்டு<br>8. போற்றிக் கலிவெண்பா<br>9. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்<br>10. பெருந்தேவபாணி |
| கபிலதேவ நாயனார் (கி.பி.11ம் நூற்றாண்டு) | 1. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை<br>2. சிவபெருமான் இரட்டை மணிமாலை<br>3. சிவபெருமான் திருவந்தாதி |
| பரண தேவ நாயனார் (கி.பி.10ம் நூற்றாண்டு) | 1. சிவபெருமான் திருவந்தாதி |
| அதிரா அடிகள் (கி.பி.7ம் நூற்றாண்டு) | 1. மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை |
| எம்பெருமானடிகள் | 1. சிவபெருமான் மும்மணிக்கோவை |
| ஐயடிகள் காடவர்கோன் | 1. சேத்திர வெண்பா |
| சேரமான் பெருமாள் நாயனார் (கழறிற்றறிவார் நாயனார்) | 1. திருக்கயிலாய ஞான உலா (ஆதி உலா)<br>2. பொன் வண்ணத்து அந்தாதி<br>3. திருவாரூர் மும்மணிக்கோவை |
| பட்டினத்தடிகள் (கி.பி.10ம் நூற்றாண்டு) | 1. கோயில் நான்மணிமாலை<br>2. திருக்கழுமல மும்மணிக்கோவை<br>3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை<br>4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி<br>5. திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது |
| நம்பியாண்டார் நம்பிகள் (தமிழ் வியாசர்) | 1. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்<br>2. திருத்தொண்டர் திருவந்தாதி<br>3. ஏகாதச மாலை<br>4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி |

| | |
|---|---|
| | 5. திருச்சபை விருத்தம்<br>6. திருமும்மணிக்கோவை<br>7. திருவுலா மாலை<br>8. திருக்கலம்பகம்<br>9. திருத்தொகை |

### நாலாயிரப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர்

| எண் | ஆழ்வார் | நூல்கள் |
|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி – 100 பாடல்கள் |
| 2. | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி – 1000 பாடல்கள் |
| 3. | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி – 100 பாடல்கள் |
| 4. | திருமழிசை ஆழ்வார் | திருச்சந்த விருத்தம் நான்முகன் திருவந்தாதி |
| 5. | நம்மாழ்வார் | திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி |
| 6. | மதுரகவி ஆழ்வார் | 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' எனும் பதிகம் |
| 7. | குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி (வடமொழியில் முகுந்த மாலை) |
| 8. | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி |
| 9. | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி, திருப்பாவை |
| 10. | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் பதிகம் |
| 11. | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருமாலை (10 பாடல்கள்), திருப்பள்ளி எழுச்சி (45 பாடல்கள்) |
| 12. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி திருக்குறுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் |

- **காப்பியக் காலம்**

கி.பி. 900 முதல் கி.பி. 1200 வரையிலான காலம் சோழர் காலம் என்று கூறப்படுகிறது. 10 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் வீழ்ந்ததால், சோழர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்களும் பெரும் சக்தியாக உயர்ந்தனர். இவர்கள் காலத்தில் ஐம்பெருங்காப்பியமும் ஐஞ்சிறுகாப்பியமும் இக்காலத்தில் தோன்றின. மேலும் இக்காலத்தில் பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றின.

## ஐம்பெருங்காப்பியங்கள்

| எண் | நூலின் பெயர் | பெயர்க் காரணம் | நூலமைப்பு | யாப்பு | ஆசிரியர் | காலம் | சமயம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சிலப்பதிகாரம்<br>(வே. பெயர்)<br>முத்தமிழ்க் காப்பியம்<br>குடிமக்கள் காப்பியம் | சிலம்பு + அதிகாரம்<br>(சிலம்பின் மூலம் அதிகரித்த கதை) | 3 காண்டங்கள்<br>புகார் – 10<br>மதுரை – 13<br>வஞ்சி – 7<br>30 காதைகள் | நிலை மண்டில ஆசிரியப்பா | இளங்கோவடிகள் | கி.பி.2ம் நூற். | சமணம் |
| 2. | மணிமேகலை<br>(வே.பெயர்)<br>மணிமேகலைத் துறவு | கோவலன் – மாதவி மகள் மணிமேகலையின் வாழ்வு பேசும் கதை | 30 காதைகள்<br>4286 அடிகள் | நிலை மண்டில ஆசிரியப்பா | மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் | கி.பி. 2ம் நூற். | பௌத்தம் |
| 3. | சீவக சிந்தாமணி<br>(மண நூல்) | சீவகனின் கதை கூறும் நூல், சிந்தாமணி நினைத்ததைத் தரும் கல் | 13 இலம்பகங்கள்<br>3147 விருத்தப் பாக்கள் | விருத்தப் பாக்கள் | திருத்தக்கத் தேவர் | கி.பி.9ம் நூற். | சமணம் |
| 4. | வளையாபதி | -- | 75 பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன | விருத்தம் | பெயர் தெரியவில்லை | கி.பி.9ம் நூற். | சமணம் |
| 5. | குண்டலகேசி | துறவியான போது களைந்த கூந்தல் சுருள் சுருளாக (குண்டலமாக) கேசம் வளர்ந்ததால் – பத்திரை எனும் பெண் இப்பெயர் பெற்றாள். அவளது கதை கூறும் நூல் | 19 பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன | விருத்தம் | நாதகுத்தனார் | கி.பி.8ம் நூற். | பௌத்தம் |

## ஐஞ்சிறுகாப்பியங்கள்

| எண் | நூலின் பெயர் | பெயர்க் காரணம் | நூலமைப்பு | யாப்பு | ஆசிரியர் | காலம் | சமயம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நீலகேசி<br>(நீலகேசித் தெரட்டு)<br>(நீலகேசித் திரட்டு) | நீல (கருமை) கேசி – கூந்தலை உடையவள் கதை | 10 சருக்கங்கள்<br>894 பாடல்கள் | விருத்தம் | பெயர் தெரியவில்லை | கி.பி.5 (அல்)<br>கி.பி.6ம் நூற். | சமணம் |
| 2. | சூளாமணி | திவிட்டன், விசயன் இருவரும் சூளாமணி போல் தெரிந்த பண்பு கருதியது | 12 சருக்கங்கள்<br>2330 பாடல்கள் | விருத்தம் | தோலாமொழித் தேவர் | கி.பி.7 (அல்)<br>கி.பி.10ம் நூற். | சமணம் |
| 3. | யசோதர காவியம் | –– | 5 சருக்கங்கள்<br>320 பாடல்கள் | விருத்தம் | வெண்ணாவலூர் உடையார்வேள் | கி.பி.13ம் நூற். | சமணம் |
| 4. | உதயணகுமார காவியம் | உதயணனின் கதை | 6 காண்டங்கள்<br>369 பாடல்கள் | விருத்தம் | கந்தியார் எனும் பெண் துறவி | கி.பி.15ம் நூற். | சமணம் |
| 5. | நாககுமார காவியம் | நாககுமாரன் கதை | 5 சருக்கங்கள்<br>170 பாடல்கள் | விருத்தம் | பெயர் தெரியவில்லை | கி.பி.16ம் நூற். | சமணம் |

- **சிற்றிலக்கிய காலம்**

நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கிய காலம் என்று அழைக்கலாம். பல்வேறு காலங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும், சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்ற கி.பி. 15–ஆம் நூற்றாண்டு முதல் 19–ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சிற்றிலக்கியக் காலமாக வரையறுக்கப்படுகிறது. தமிழில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

**சிற்றிலக்கியங்கள்**

| எண் | சிற்றிலக்கிய வகை | சான்றாகும் நூல் |
|---|---|---|
| 1. | உலா | சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'ஆதியுலா' திருக்கைலாயர் ஞான உலா : ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலா எனப் பலவாகும். 80க்கும் மேற்பட்ட உலாக்க உள்ளன. |
| 2. | கலம்பகம் | நந்திக்கலம்பகம், வீரமாமுனிவரின் திருக்காவனூர்க் கலம்பகம், ஜி.யு.போப்பின் தமிழ்ச் செய்யுட் கலம்பகம் என 85 கலம்பகங்கள் வந்துள்ளன. |
| 3. | குறத்திப்பாட்டு | குறவஞ்சிக்கு இதுவே மூலம் |
| 4. | கோவை | பாண்டிக்கோவை, தஞ்சைவாணன் கோவை |
| 5. | தூது | தமிழ்விடுதூது உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடுதூது. பலவகை தூதுக்கள் உள்ளன. |
| 6. | நூற்றந்தாதி | அபிராமி அந்தாதி |
| 7. | பரணி | கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி முதலியன |
| 8. | பிள்ளைத்தமிழ் | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் – குமரகுருபரர், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலாகப் பல தோன்றியுள்ளன |
| 9. | மடல் | திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடல், பெரிய திருமடல் |
| 10. | மெய்க்கீர்த்தி | கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன |

- **ஐரோப்பியர் காலம்**

தமிழ் உரைநடை வரலாற்றில் கி.பி.பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை உள்ள காலப்பகுதி ஐரோப்பியர் காலம் எனப்படும். கிறித்தவ சமயப் பிரச்சாரம் செய்யும் நோக்கில் ஐரோப்பியர்

தமிழ்நாட்டிற்கு வந்தனர். ஆனால் அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் உரைநடைக்கும் செய்த தொண்டே மிகப் பெரியதாகும். சமயம் பரப்பும் நோக்கில் தமிழைப் படித்த ஐரோப்பியர், அதன் இனிமையில் மயங்கினர். ஆய்வு நோக்கில் மொழியை வளப்படுத்தினர். தமிழ் எழுத்து வடிவில் இருந்த குறைபாடுகளை நீக்கினர். பண்டிதரே படித்தறிய முடிந்த உரையாசிரியர்களின் உரைநடையை மாற்றினர். சிறுசிறு வாக்கியங்களில் மக்கள் பேசும் மொழியில் ஐரோப்பியர் எழுத ஆரம்பித்தனர். அதன் பயனாகத் தமிழுக்கு ஒரு புதிய உரைநடை கிடைத்தது.

- **தற்காலத் தமிழ் இலக்கியங்கள்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதி உள்ளிட்ட பெருங்கவிஞர்கள் தோன்றிக் கவிதை இலக்கியத்தை வளம்பெறச் செய்தனர். கல்கி, உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள் தோன்றி நாவல் இலக்கியத்தை வளப்படுத்தினர். புதுமைப்பித்தன் உள்ளிட்ட பலர் தோன்றி சிறுகதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர். திரு.வி.க. உள்ளிட்ட தமிழறிஞர்கள் நல்ல கட்டுரை இலக்கியங்களைப் படைத்து தமிழன்னைக்கு அணி செய்தனர்.

தவத்திரு சங்கரதாஸ்சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் உள்ளிட்டோரின் உழைப்பால் தமிழ் நாடகத்துறை வளமுற்றது. கடிதம், மொழி வரலாறு, வாழ்க்கை வரலாறு, ஆராய்ச்சி உள்ளிட்ட இலக்கியத்துறைகள் தோன்றி தமிழை உலகளாவிய நிலைக்கு உயர்த்தியது. இருபத்தோராம் நூற்றாண்டில் புதிய புதிய துறைகளான மொழிபெயர்ப்பியல் துறை, அகராதித்துறை, பதிப்புத்துறை, சுவடியியல் துறை, மானிடவியல் துறை என்று பல்வேறு நிலைகளில் தமிழில் புதியன தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இவை அனைத்தும் உலகச் செம்மொழிகளில் தமிழ் உயர்ந்து விளங்கி வருகின்றது என்பதை உலகிற்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றன.

இப்பகுதியில் உள்ள குறிப்புகள் பற்றி மேலும் அறிய தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூலகத்தில் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. கலைத்திட்டம் என்றால் என்ன?<br>2. கலைத்திட்டம் அமையும் விதம் குறித்து எழுதுக.<br>3. தமிழ் இலக்கண நூல்கள் பற்றி விரிவாக எழுதுக.<br>4. முச்சங்கம் – குறிப்பு வரைக.<br>5. சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் பற்றி எழுதுக.<br>6. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் யாவை? |

## 1.3 இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பித்தல்

மொழி கற்பித்தலை முதல் மொழி நிலை, இரண்டாம் மொழி நிலை, மூன்றாம் மொழி நிலை அல்லது அயல்மொழி நிலை என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். "தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத் தமிழ் கற்பித்தல் என்பது முதல் நிலையாகக் கொள்ளப்படுகிறது. தமிழ் புழங்கும் சுற்றுப்புறச் சூழலில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிறமொழி மாணவர்கள் தமிழ் கற்பது இரண்டாம் நிலையாகக் கருதப்படுகிறது. தமிழ் புழங்கும் சுற்றுப்புறச்சூழல் அற்ற இடத்தில் பிறமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் கற்பது அயல்மொழி நிலை என வழங்கப்படுகிறது" என திண்ணப்பன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அயலகத்தில் வாழும் மாணவர்கள் பிற மொழியுடன் தமிழ் மொழியையும் சேர்த்துக் கற்பதும் அயல்மொழி நிலையாகக் கருதப்படுகிறது.

மொழி கற்பித்தலில் இரண்டு படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுவதற்கேற்ப உள்ளடக்கத் தரமும், கற்றல் தரமும் அமைக்கப்பட வேண்டும். மாணவர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்ற அடிப்படை மொழித்திறன் ஆளுமையைக் கொண்டு மொழியைப் பயன்படுத்திப் பிறருடன் தொடர்பு கொள்ளவும், மொழி அறிவைப் பெறவும், இலக்கணப் பிழையின்றி எழுதவும் மொழியைப் பயன்படுத்தி எண்ணங்களையும், கருத்துகளையும் வெளிப்படுத்தி உள்ளடக்கத்தரமும், கற்றல்தரமும் இரண்டாம்படிநிலைகளில் வரையறுக்கப்பட வேண்டும்.

### 1.3.1 இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்றலும் அடிப்படைத் திறன்களும்

மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் அடிப்படைத் திறன்களாகக் கருதப்படுகின்றன. அடிப்படைத் திறன்களில் படித்தலும் எழுதுதலும் மிக முக்கியமானதாகும். படித்தல் அல்லது வாசித்தல் என்பது கையெழுத்து அல்லது அச்செழுத்தில் உள்ளதைக் கண்ணால் பார்த்தல், வாயால் உச்சரித்தல், பொருள் உணர்தல் என்ற மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. இதே போல் எழுதுதல் திறனையும் மூன்றாகப் பிரிக்கலாம். அவை பிறர் உதவி கொண்டு எழுதுதல் (அச்சின் மேல் எழுதுதல், பார்த்து எழுதுதல்), படிப்படியாகத் தாமே எழுதும் நிலைக்குச் செல்லுதல் (சொல்வதை எழுதுதல்), தாமாகவே தாராளமாக எழுதும் திறனை அடைதல் (கட்டுரை எழுதுதல்) என்பனவாகும்.

தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மதிப்பீட்டு ஆவணத்தின் அடிப்படையில் படித்தல் மற்றும் எழுத்துத் திறன்களில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் பிறமொழி மாணவர்களின் அடைவுநிலை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் தரத்தை எந்த நிலையில் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதைக் காட்டுவதே அடைவுநிலையாகும்.

### 1.3.2 இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்றலில் ஏற்படும் இடர்ப்பாடுகள்

உலகில் பல நாடுகளில் தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் பிறமொழி மாணவர்களிடமிருந்து, தமிழ் எழுத்துகளை உச்சரிப்பதில் எதிர்நோக்கும் சிக்கல்களாக மயங்கொலிகள் உச்சரிப்புப் பிழை, மாற்றொலியன்கள் உச்சரிப்புப் பிழை, குறில் நெடில் உச்சரிப்புப் பிழை, குற்றியலுகர உச்சரிப்பு பிழை ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. இவ்விடர்ப்பாடுகள், அயலகத்தில் தமிழைக் கற்கும் மாணவர்களுக்கும் பொருத்தும்.

இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்கும் நிலை நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. பொதுவாகத் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களிடம் உச்சரிப்புப் பிழைகள், பொருளுணர்ந்து வாசிக்காத நிலை, உணர்வின்றி வாசித்தல், உள்ளதை உள்ளவாறு வாசிக்காத நிலை, தொடர்ச்சியாக வாசிக்க இயலாமை, வாசிக்கும்போது அச்சமும் கூச்சமும் மேலோங்கி நிற்றல், எழுதுவதில் வரிவடிவப் பிழைகள், ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறொரு எழுத்தை எழுதுதல்,

எழுத்தை விட்டு எழுதுதல், குறில் நெடில் பிழைகள் முதலான சிக்கல்கள் சூழலுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளை முறையாகக் கையாண்டு ஆசிரியர்கள் திறம்படச் செயல்பட வேண்டும்.

### 1.3.3 இரண்டாம் மொழி கற்றலை மேம்படுத்துதல்

- இரண்டாம் மொழியின் தேவையினை அறிந்து தமிழ்மொழி தற்போதைய தேவை அதனுடைய மதிப்பு, செல்வாக்கு ஆகியவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்; தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் போது ஏற்படும் சிக்கல்களைத் தமிழாசிரியர்கள் இனங்கண்டு சுட்டிக்காட்ட வேண்டும்.
- தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியல் நெறி, பண்பாட்டுக் கூறுகள் ஆகியன தமிழ் கற்றல்– கற்பித்தல் மூலம் கடத்தப்படும் விதம், பிற மொழியினர் கொண்டுள்ள கருத்தியல் மொழியின் அடையாளம், தனித்துவம் என்பன பற்றி ஆராய வேண்டும்.
- இரண்டாம் மொழி கற்றல் மொழியியல் காரணிகள், தமிழ்மொழியின் தேவை, வளர்ச்சி போன்றன பற்றி ஆராய வேண்டும்
- இரண்டாம் மொழியாகக் கற்றல் – கற்பித்தலில் உள்ள சிக்கல்களுடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள், இணையதளத் தரவுகள் ஆகியவற்றைக் கொண்டு ஆழமான ஆய்வை செய்தல் வேண்டும்.
- கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து பெறப்படும் கருத்துகள் நடைமுறைச் சூழலுக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட வேண்டும்.
- காலத்தின் தேவையும் சூழலும் கருதி தமிழ் கற்பித்தலில் வளர்ச்சி நிலைக் குறித்த பொருண்மையை ஆராயப்படவேண்டும்.
- மொழி கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் ஆசிரியர் மாணவர்களிடையே ஆர்வத்தை அதிகரிக்க தற்கால தொழில்நுட்பத்துடன் இணைந்து செயல்பட வேண்டும்.

இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்கும் மாணவர்களின் மனநிலை அறிந்து தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும்.

## 1.4 வகுப்பறைச் சூழலும் மொழியைக் கையாளுதலும்

மொழியைத் துல்லியமாகவும், நுட்பமாகவும் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் மொழி அறிவைப் பெறுதல் ஆகும். தாய்மொழி மூலமாகக் கல்விக் கற்கும்போது பல்துறை நூல்களையும் கற்றுத் தெளிய வாய்ப்பு ஏற்படுகிறது. மனிதனின் எண்ணங்களைப் பேச்சாலும், எழுத்தாலும் வெளியிடவும் அவர்களின் சிந்தனைத் தாக்கங்களைப் படைக்கவும் மொழி பயன்படுகிறது.

### 1.4.1 மொழியை வகுப்பறையில் கற்பித்தலின் அவசியம்

தெளிவாகப் பேசவும், சிறப்பாக எழுதவும், நன்றாகப் படிக்கவும் மொழி அறிவு இன்றியமையாததாகும். மொழி அறிவினால் பிறர் கூறுவதை எளிதில் புரிந்து கொள்ளவும், சூழ்நிலையைத் திறமையாகச் சமாளிக்கவும் முடியும். கல்வியின் நோக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதற்கும், மாணவர்கள் எளிதில் பயன்பெற்று இன்புறவும் மொழி அறிவு அவசியமாகிறது. எழுத்துகளின் ஒலி மற்றும் வரி வடிவங்களைச் சரியாகவும், அழகாகவும், தெளிவாகவும், பிழையில்லாமலும் எழுத மொழியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொழி அறிவு பெற்றால்தான் சமூகத்துடன் இணக்கமான நடத்தையை மேற்கொள்ள முடியும். இதனையே திருவள்ளுவர் "நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்த உள்ளதூஉம் அன்று" என்று கூறியுள்ளார். சரியான உச்சரிப்புடன், திருத்தமாகவும், அழுத்தமாகவும், உணர்ச்சியுடனும், பண்புடனும், பிழையின்றியும், பேசுவதற்கும், எழுதுவதற்கும் மொழி அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

### 1.4.2 மொழியை வகுப்பறையில் கற்பித்தலின் நோக்கங்கள்

மொழித்திறன் வல்லமை உடையவரே பாடங்களின் உண்மை அறிந்து புதியனவற்றைப் படைக்கும் வல்லமையும் பெறுவர். மொழியின் சிறப்பும் பண்டையோரின் பண்பும் அறிய, இலக்கியங்களே துணை நிற்றன.

- மொழி அறிவைப் பெறுதல்
- கேட்டுப் பொருளுணரும் ஆற்றல் பெறுதல்
- படித்துப் பொருள் உணரும் ஆற்றல் பெறுதல்
- இலக்கியப் பாடலின் சுவையுணர்ந்து போற்றுதல்
- மனத்திலே உள்ளவற்றை வெளியிடுதல்
- கற்பனை ஆற்றலையும் அழகுணர் ஆற்றலையும் வளர்த்தல்
- சிறந்த மனப்பயிற்சியாக அமைதல்
- மொழிப்பற்று, நாட்டுப்பற்றை ஊட்டுதல்
- படைப்பாற்றலை வளர்த்தல்
- பிழையின்றி எழுதுதல்
- பண்பு நலன்களைப் போற்றி வளர்த்தல்
- வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்புதல்
- சொல்லாட்சித் திறன் பெறுதல்
- சக மாணவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் மொழி வளத்தைப் பெருக்கிக் கொள்ளுதல்
- மதிப்புணர்வை வளர்த்தல்
- வாழ்வியல் திறன்களை அறிய வைத்தல்

ஆகிய திறன்களை வளர்ப்பதற்காகவே வகுப்பறையில் மொழி கற்பிக்கப்படுகிறது.

### 1.4.3 வகுப்பறையில் மொழியைக் கையாளும்போது கவனிக்க வேண்டிய கூறுகள்

- மாணவர்கள் எப்படிப்பட்ட சூழலில் இருந்து வருகின்றனர் எனக் கவனிக்க வேண்டும்.
- மாணவர்கள் பேசும் மொழியினை அறிதல் வேண்டும்.
- மாணவர்கள் வாழும் பகுதியில் பேசப்படும் மொழி என்ன என்று அறிந்திருத்தல் வேண்டும்.
- தமிழ்மொழியை முதல், இரண்டாம், மூன்றாம் மொழியாக எவ்வகையில் கற்கிறார்கள் என்பதை அறிதல் வேண்டும்
- மாணவர்களின் தாய்மொழி எது? பேசும் மொழி எது? என்பதை அறிதல் வேண்டும்

### 1.4.4 வகுப்பறைச் சூழலில் அடிப்படைத் திறன்களைக் கையாளுதல்

மொழி கற்பித்தலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாகக் கருதப்படும். இவற்றை வகுப்பறைச் சூழலில் எவ்வாறு கையாள்வது என்பதைப் பயிற்சி ஆசிரியர் அறிய வேண்டும். கேட்டல், பேசுதல் என்பன ஒலியை அடிப்படையாகக் கொண்டவையாகவும் பேசுதல், எழுதுதல் என்பன வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவும் திகழ்கின்றன.

கேட்டல், படித்தல் ஆகிய திறன்கள் நம் கருத்துகளை அறிந்து கொள்ள உதவுவனவாகும். எனவே இவற்றை **உட்கொள்ளும் திறன்கள்** என அழைப்பர்.

பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்கள் நம் கருத்துகளை வெளியிட உதவுவனவாகும். எனவே இவற்றை **வெளிப்படும் திறன்கள்** என்பர்.

மாணவர் விரும்பும்வகையில் மொழி கற்பித்தல் சிறப்படைய வகுப்பறையில் அடிப்படை திறன்கள் இன்றியமையாததாகத் திகழ்கிறது. இவை ஆசிரியர் மாணவர் கலந்துரையாடலில் வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் குறித்து விளக்கமாக அலகு – 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் மொழியின் அடிப்படைத் திறன்களை முன்கூட்டியே அறிவது நம் தலையாய கடமையாகும். எனவே சுருக்கமாக மொழியின் திறன்களைக் காண்போம்.

- **கேட்டல் திறன்**

கேட்டல் என்பது ஒலிகளைக் கேட்டல் மட்டுமன்று, கேட்டதன் பொருளை உணர வேண்டும். எனவே, கேட்டல் என்பதற்குக் கேட்டுப் பொருள் உணர்தல் என்று பொருள் கொள்ள வேண்டும். கேட்டுப் பொருள் உணர்ந்து கேட்ட பேச்சின் கருத்தினை அறிந்து கொள்ளுதலே கேட்டல் திறனாகும்.

- **பேசுதல் திறன்**

பேச்சாற்றல் பெற்றவர்களே உலகில் வெற்றிப் பெற முடியும். திருத்தமாக, அழுத்தமாக, தெளிவாக, அச்சம் கூச்சமின்றி, பிழையின்றி, உணர்வுகளுடன் பேச மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். **"செந்தமிழும் நாப்பழக்கம்"** என்பதற்கு இணங்க மாணவர்களிடம் பேச்சுத் திறனை வளர்க்க வேண்டும்.

- **படித்தல் திறன்**

ஒரு அச்சிட்ட வரியையோ, கையெழுத்தையோ பார்த்துப் படிக்கும்போது, சிறந்த உச்சரிப்புடன் உள்ளதை உள்ளவாறு திருத்தமாக உணர்வுகள் கலந்து ஒலியமைதியுடன் படிக்க வேண்டும். இதுவே படித்தல் திறன் எனப்படும்.

- **எழுதுதல் திறன்**

வகுப்பில் ஆசிரியர் சொற்களையோ, தோடர்களையோ கூற அவற்றைக் கேட்டு மாணவர் எழுத வேண்டும். மாணவர் தெளிவாக இடைவெளிவிட்டு அளவும் அழகும் பொருந்தி வரியொற்றி பிழையின்றி எழுத வேண்டும். இதுவே எழுதுதல் திறன் எனப்படும்.

## 1.5 மொழியாசிரியருக்குரிய பண்பு நலன்கள்

பண்டைய காலக் கல்வி முறையிலிருந்து தற்காலக் கல்வி முறை மிகவும் மாறுபாடடைந்துள்ளது. ஓர் ஆசிரியராக இருப்பதுடன் மாணவர்களிடம் உடன் பிறந்தவரைப் போல் உறவாடியும், தலைவனைப் போல் வழிகாட்டியும், நண்பரைப் போல் கலந்து வாழ்ந்தும் பணியாற்றி வருகின்றனர். ஆசிரியர் மாணவனது உடல் நிலை வளர்ச்சி, மனவளர்ச்சி, சமூக மனப்பான்மை வளர்ச்சி ஆகிய அனைத்து வளர்ச்சிக்கும் பொறுப்பாக உள்ளார். ஆதலால் ஆசிரியரின் பொறுப்பும் கடமையும், பணிச்சுமையும் பன்மடங்கு பெருகியுள்ளன. இந்நிலையில் ஆசிரியராகப் பணியாற்றுவோர் அப்பணிக்குரிய பண்புகளைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.

### 1.5.1 மொழியாசிரியரின் பண்பு நலன்கள்

ஆசிரியர்களுக்குப் பல பண்புகள் இருக்கின்றன. ஆனால் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் கீழ்க்காணும் சிறப்பு பண்புநலன்களைப் பெற்றிருக்க வேண்டும்.

- மொழிப்பற்று
- இலக்கண இலக்கியப் புலமை
- திறமையாக எழுதும் திறன்
- உளநூல் வல்லுநர்
- கலை ஆர்வமிக்கவர்
- பயிற்றலில் அடிப்படை விதிகளை அறிந்தவராதல்
- பாடப்பொருள்களைத் தயாரித்தல்
- பாட முறைகளையறிந்து விழைவுடன் கற்பித்தல்
- தற்பெருமையும் சினமும் இல்லாதிருத்தல்
- நகைச்சுவை நாட்டம்
- மொழியாக்கத் திறனும் – நூல்கள் இயற்றலும்

## 1.6 தொகுப்புரை

தமிழ்மொழி கற்பித்தல் என்ற இவ்வலகில் கலைத்திட்டத்தில் தமிழ்மொழி பெறுமிடம், மொழியின் பன்முக வளர்ச்சி நிலை, இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பித்தல், வகுப்பறைச் சூழலில் மொழியைக் கையாளும் முறை, நல்ல மொழியாசிரியருக்குரிய பண்புநலன்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதனால் பயிற்சி ஆசிரியர் பயனடைவர்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
|---|
| 1. மொழி கற்பித்தலின் படிநிலைகள் யாவை?<br>2. இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்றலில் ஏற்படும் இடர்பாடுகள் யாவை?<br>3. இரண்டாம் மொழி கற்றலை மேம்படுத்தும் முறைகள் குறித்து எழுதுக.<br>4. வகுப்பறையில் மொழியைக் கையாளும்போது கவனிக்க வேண்டிய கூறுகள் யாவை?<br>5. அடிப்படைத் திறன்களைக் கையாளும் முறைகள் குறித்து எழுதுக.<br>6. மொழியாசிரியர் பெற்றிருக்க வேண்டிய சிறப்பு பண்புகள் யாவை? |